[பிற்பகல் 12.40]

பஸ் கட்டண உயர்வு பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. அதுகுறித்து தனிப்பட்ட பஸ் முதலாளிகளிடமிருந்து எந்தக் கோரிக்கையும் வந்ததாகத் தெரியவில்லை. அதே நேரத்திலே தனியார் கம்பெனி பஸ்கள் அனைத்தும் லாபத்தில் ஓடக்கூடிய நிலையை இருக்கிறது, ஆகவே அரசுப் போக்குவரத்துக் கழகம் மட்டும் பஸ் கட்டண உயர்வு பற்றிப் பேசுவது வியப்பாக இருக்கிறது. ஏழை எளிய மக்களின் நலனை முன்னிட்டு பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று கூறி எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

8. அறிவிப்பு

போக்குவரத்து மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

நாளைய முன்னாள் இராணுவ வீரர்களுடைய நினைவுச் சின்னத்திற்கு அருகில் ஒரு பேரட் நடைபெறுகிற காரணத்தாலேயும் நாளைக்கு அவர்கள் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துகிற வகையிலும் காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும் அந்தப் பாதையிலே போக்குவரத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து சுற்றுப்புறமாக இருக்கிற ஆடம்ஸ் சாலை வழியாகவும், தீவுத் திடல் வழியாக காயிதே மில்லத் பாலத்தின் வழியாகவும் செயின்ட் ஜார்ஜ் பாலத்தின் வழியாகவும் வந்து சேரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இறுதியாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பிகிறேன் எனக்கு முன்னாலே பேசிய எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்த உரையிலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி கருத்துக்களைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்த அரசு சமீபத்திலே நடந்த தேர்தலிலே தோழமைக் கட்சிகளுடைய ஆதரவோடு வெற்றி பெற்று அமர்ந்ததைத் தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் பெரிதும் வரவேற்றுப் பாராட்டினார்கள். இந்த அரசு பொது மக்களுக்கு செய்யவேண்டிய நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய அனைத்தையும் மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கும் என்றும் அதிலே தவறுகள் ஏற்பட்டால் தவறுகளை நட்பு முறையிலே விமர்சனம் செய்யும் என்றும் எங்களுடைய கட்சியில் நிலை எடுக்கப்பட்டது. அதே நிலையில் தான் நிற்கிறோம். இன்று இந்த